DEPOSITION OF WITNESS IN THE COURT OF
II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, RANIPET.

SC No. : 239/2009

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw9 |
| Name | : | N.நந்தகோபால் |
| Father's / Husband's Name | : | நரசிம்மன் |
| Age | : | 51 |
| Religion | : | ஓட்டுநர் |
| Calling | : | |
| Caste | : | நாயுடு |
| Village | : | வாலாஜா |
| Date | : | 10.09.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

மு.வி.

நான் தற்போது எண் .1 வளையர்காரா தெரு வாலாஜாவில் வசிக்கிறேன். நான் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் ஒரு ஏழுமலை என்வபர் கிளீனராக பணிபுரிந்து வந்தார். ஏழுமலை என்பவர் சம்பவம் நடந்தப்போது நான் லாரி ஓட்டுனராக தான் பணிபுரிந்தேன். ஒரு மாரிமுத்து என்வர் வண்டியின் சீட் லைனிங் வேலை செய்து வந்தார். வண்டியின் வேலைக்கா நான் செல்லும் போது அந்த மாரிமுத்து எனக்கு பழக்கம். என் வண்டியின் வேலைக்காக 1999 நவம்பரில் நான் சென்றப்போது மாரிமுத்து என்னிடம் பத்திரப்புதிவு அலுவலகத்தில் பத்திரம் எழுதுவர் யாராவது எனக்கு தெரியுமா என்று கேட்டார். எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன். என்னுடன் இருந்த ஏழுமலை என்பவர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் கோடிஸ்வரன் என்பவர் இருப்பார் அவரைப்போய் பாருங்கள் என்று சொன்னார். பிறகு நாங்கள் போய்விட்டோம். என்னைப் போலீசார் விசாரித்தார்கள்.

அரசு தரப்பில்கேட்டுக்கொண்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை.

வாலாஜாப்பேட்டையில் சீட் லைனிங் வேலை செய்யும் மாரிமுத்து என்பவர் வண்டிக்கு சீட் தைக்கும்போது என்னிடம் பத்திரம் இருக்கிறது அதை வாங்க ஆள் இருக்கிறார்களா,

என்றும் அதற்கு நீங்கள் விசாரித்து சொல்வதாக சொன்னீர்கள் என்றும், கிளீனராக வேலைப்பார்த்த ஏழமலை வாலாசாப்பேட்டை என்பவரிடம் இதுப்பற்றி சொன்னப்போது ஏழுமலை கோடிஸ்வரனை அறிமுகப்படுத்தி வைத்தார் என்றும், பின்னிட்டு நீங்கள் கோடீஸ்வரனிடம் மாரிமுத்துவை வாலாசாப்பேட்டையில் அறிமுகம் செய்வைத்தீர்கள் என்றும் அவர்கள் பேசிக்கொண்டார்கள் என்றும் அவர்கள் பத்திரம் பதிவு செய்துக்கொள்வது குறித்து பேசிக்கொண்டார்கள் என்று நினைத்ததாகவும் போலீசார் உங்களை விசாரிக்கும் போது சொல்லியுள்ளீர்கள் என்றும், தற்போது வேண்டுமென்றே வழக்கிற்காக மாற்றி பொய் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.